102

கும்பகோணம் விவசாய சங்கத்தின்
மாஸாந்திரப் பத்திரிகை.

வாலியம் 12] 1918-௵ ஜூலை—ஆகஸ்டு௴ [நெ. 7 & 8

MONTHLY JOURNAL OF 8 PAGES.

EDITED BY

Mr. R. Srinivasa Iyengar B. A. and Mr. A. Subramania Iyer, B. A.

Annual Subscription is One Rupee. Post Free.

சர்க்கியுலர்.

1918௵ ஆகஸ்டு௴ 12உ யுள்ள
1918௵த்திய டி. டிஸ். நெ 3235 ரிவினியூ.

இதுவரையில் புஞ தானியங்கள் (அவைகளில் முக்கியமாய் பருப்பும், பயறு தினுசுகளும்) இந்த ஜில்லாவிற்கு ஏராளமாய் இறக்குமதியாகிக்கொண்டிருந்தன. ரயில் போக்குவரத்து நிபந்தனைகளில் இந்த தானியங்களின் இறக்குமதி அதிகமாகக்குறைந்திருக்கின்றது. இனிமேல் முழுவதும் நின்றுவிட்டாலும் விடும். இதுவிஷயத்தை ஜனங்கள் எல்லோருக்கும் கிராமாதிகாரிகள் தெரியப்படுத்துவதுடன் சீக்கிரத்தில் ஏற்படக்கூடிய தானியக்குறைவை நிவர்த்திக்கும்பொருட்டு இந்த உணவு தானியங்களின் சாகுபடியை விர்த்திசெய்யவேண்டியதின் அவசியத்தையும் ரயத்துகளுக்கு கிராம அதிகாரிகள் எல்லோரும் நன்றாய் எடுத்துக்காட்டவேண்டியது.

ஜில்லா கஜட்டு }
செப்டம்பர்௴ 2உ }

ஆர். நாராயண அய்யர்,
கலெக்டர்.

விவசாய டிபார்ட்மெண்டு.

விவசாயிகளுக்கு ஓர் எரு.

இப்போது நடந்துவரும் யுத்தத்தில் நம்முடைய பிரிட்டிஷ் ராஜாங்கத்தாருக்கு இந்தியா தேசத்தவராகிய நாம் எவ்விதமாய் உதவி புரியக்கூடுமென்பதை ஆலோசிக்க கொஞ்சகாலத்திற்குமுன் டில்லியில் ஒரு மகாசபை ஒன்று கூட்டப்பட்டது. அந்தகூட்டத்தில் ஷெ விஷயமாய் ஏற்பட்ட தீர்மானங்களில் முக்கியமான தென்னவென்றால்: நம் தேசத்தில் இப்போது விளைவிக்கப்படுகிற உணவுப்பொருள்களின் உற்பத்தியை அதிகப்படுத்துவதினால் நாம் யுத்தத்திற்கு வேண்டிய உதவி புரிந்தவராக ஏற்படுமென்று தீர்மானிக்கப்பட்டது.

2. உணவுப்பொருள்களை அதிகரிக்கச்செய்வது இரண்டு விதமாகச்செய்யலாம். முதலாவது: இப்போது எவ்வளவு பூமி சாகுபடியிலிருக்கிறதோ அதைவிட ஜாஸ்தி விஸ்தீரணத்தில் அப்பயிர்களை சாகுபடி செய்தும், இரண்டாவது ஒவ்வொரு ஏக்கரா பூமியில் தற்காலத்தில் என்ன விளைவு ஏற்படுகிறதோ அதை அதிகரிக்கும்படி செய்தும்,

ஆக இவ்விரண்டுவகையாலும் விளைவை அதிகமாகும்படி செய்யலாம். சென்னை ராஜதானியில் ஆகாரத்திற்காக விளைவிக்கப்படுகிற பயிர்களில் முக்கியமானது நெல். நெற்பயிருக்கு நீர் ஆதாரம் முக்கியமானதாகையால், ஜாஸ்தி பூமியை புதிதாக நெல்சாகுபடிக்கு கொண்டு வரவேண்டுமானால், நூதனமான பாய்ச்சல் வசதிகள் எற்பட்டால்மாத்திரம் இது சாத்தியமாகுமே தவிர இப்போது இருக்கும் பாய்ச்சலைக்கொண்டு ஜாஸ்தி விஸ்தீரணம் சாகுபடிசெய்ய முடியாது ஆகையால் நம் ராஜதானியில் ஒவ்வொரு எக்ராவில் இப்போது விளைகிறமகசூலை அதிகரிக்கச்செய்து, நம்மால் முடிந்தவரையில் ஷை யுத்தத்திற்கு உதவி புரிவதே சாத்தியமாகும்.

3. தஞ்சை ஜில்லா மங்கநல்லூரில் விவசாய டிபார்ட்டுமெண்டாரால் எற்படுத்தப்பட்டிருக்கிற பண்ணையில் எருவிஷயமாய் செய்த சோதனைகளிலிருந்து, மேற்படி நஞ்சை நிலங்களுக்கு முக்கியமாய் (Nitrogen) உப்புவாயுவும், (Phosphates) பிரகாசதமும் கலந்த எருவே முக்கியமாய் போடவேண்டியதென்று எற்பட்டது. இவ்விஷயத்தை மிராசுதாரர்களுக்கு தெரியப்படுத்தி, மகசூலையும் அதிகரிக்கும்படி செய்துகாட்ட சுமார் 100 டன் நிறையுள்ள எருவை அடியில் கண்ட நிபந்தனைகளின்பேரில் இனாமாக கொடுப்பதாக தீர்மானித்திருக்கிறார்கள்.

1. ஒவ்வொரு மிராசுதாருக்கும் ஒரு எக்கருக்கு வேண்டிய 300 ராத்தல் எருவுக்கு அதிகப்படாமல் கொடுக்கப்படும்.

2. அப்படி கொடுக்கப்பட்ட எருவானது, விவசாய டிபார்ட்டுமெண்டு உத்தியோகஸ்தருக்கு முன்பாக பூமிக்கு போடப்படவேண்டும்.

3. டிபார்ட்டுமெண்டு உத்தியோகஸ்தர் ஒருவர் எரு போடப்பட்ட ஸ்தலத்தின் அறுவடையையும் கண்டுமுதலையும், அதே விஸ்தீரணமும் எரு போடப்படாததுமான மற்றொரு ஸ்தலத்தின் அறுவடையையும் கண்டுமுதலையும் கவனிப்பார்.

4. எரு போடப்பட்ட ஒரு எக்கர் ஸ்தலத்தின் கண்டு முதலானது, எரு போடப்படாத ஸ்தலத்தின் கண்டு முதலைக்காட்டிலும், எருவின் கிரயமாகிய ரூ. 9-க்கு மேற்படுமானால் அடுத்த வருஷத்தில் தன்னுடைய நிலத்தில் 10 எக்கர் பூமிக்கு குறையாமல் இந்த எருவை விவசாய டிபார்ட்டுமெண்டாரிடமிருந்து வாங்குவதாக ஒப்புக்கொள்ள வேண்டியது.

இவ்விதம் பரீக்ஷை சித்திபெறுமானால் கவர்ன்மெண்டார் இது விஷயமாய் எடுத்த பிரயாசையின் நோக்கம் நிறைவேறினதாகும். அதாவது:—

1. தஞ்சை ஜில்லா மிராசுதார்கள் தங்களுடைய நிலத்தின் கண்டுமுதலை எவ்விதம்லாபகரமாய் அதிகமாகச் செய்யலாமென்பதை காண்பித்ததாக ஆகும்.

2. யுத்தத்திற்கு முன் அயல்நாடுகளுக்கு எற்றுமதியாய்க்கொண்டிருந்த இந்த விலையுயர்ந்த எருவை நம்முடைய தேசத்திலேயே உபயோகப்படுத்துவதினால் அதற்கு வேண்டிய வியாபார சௌகரியங்களும் எற்படும்.

3. சொற்ப பணச்சிலவினால் நிலத்தின் மகசூலை அதிகரிக்கச் செய்யலாமென்பதை விவசாய டிபார்ட்டுமெண்டார் விளக்கிக்காட்டி, அதினால் உண்டாகும் முக்கியமான நன்மையாகிய நம் தேசத்தின் விவசாயிகளின் க்ஷேமத்தையும் அபிவிருத்தி செய்ததாகவும் ஏற்படுகிறது.

இதில் விவரிக்கப்பட்ட எருவை பரீக்ஷை செய்ய உத்தேசமுள்ள இந்த துண்டுபத்திரிகை கொடுப்பவரிடமிருந்து வேண்டிய சமாசாரங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

எச். வி. ஸாம்ஸன்,
விவசாய டிப்டி டைரெக்டர், 5-வது ஸர்கிள்,
கோயமுத்தூர்.

நஞ்சைகளுக்கு எலும்புத்தூள், எலும்பு சத்துள்ள பாறைக்கல்தூள், மீன் பிண்ணாக்கு போடும் விதம்.

எலும்புத்தூள்.

ஏகரா 1-க்கு 1 அந்தர் முதல் அதாவது 4½ மணு முதல் 2 அந்தர் வரையில் அதாவது 9 மணுவரையில் போடலாம். நடவுதினம் அன்றைக்கு காலையில் ஒரு கூடை தூளோடு 4 கூடை ஈரமணலை, கலந்து வயலில் தெளித்துவிடவேண்டும். பிறகு உழுது நடவு நடவும். 1 மரக்கால் எலும்புத்தூள் 7 பவுண்டு நிறையிருக்கும். ஏகரா 1-க்கு 16 மரக்கால் முதல் 32 மரக்கால் வரையில் போடலாம். வளமை குறைவு உள்ள பூமியாக யிருந்தால் 32 மரக்கால் எலும்புத்தூள் போடவேண்டும். நடுத்தரமான பூமியாக யிருந்தால் 24 மரக்கால் போதும். வளமான பூமியாக யிருந்தால் 16 மரக்கால் செல்லும். எந்தெந்த பூமியில் பயிர், தழையாய் மண்டி அரிவாள் அல்லது பனங்கருக்கினால் அருக்கப்படுகிறதோ அந்த பூமிகளில் எலும்புத்தூள் போட்டால் நல்ல அடர்த்தியான கதிர்கள் வைக்கும். எலும்புத்தூளை மீன் பிண்ணாக்குடன் கலந்தும் போடலாம் எலும்புத்தூள் 4½ மணு, மீன் பிண்ணாக்குதூள் 4½ மணு இரண்டையும் கொட்டிக் கலந்து முன்சொன்ன மாதிரியாக ஒரு கூடை தூளோடு 4 கூடை ஈரமணலை, கலந்து நடவு தினத்தன்று காலையில் வயலில் ஏகர் 1-க்கு 9 மணு வீதம் தெளித்து உடனே உழுது உடனே நட்டுவிடவேண்டும். பிறகு 10 நாள் ஜலத்தை வடியவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

எலும்புச்சத்துள்ள பாரைக்கல் தூள்.

எலும்புத்தூளைப்போல தனிமையிலும், மீன் பிண்ணாக்குடனும் போடலாம். எலும்புத்தூளுக்கு சொன்னபிரகாரமே இதையும் போடவேண்டும். ஆனால் ஏகரா 1-க்கு 2 வண்டி கொளுஞ்சி தழை அல்லது ஆடாதொடை முதலிய தழைகள் அடித்த வயலில் போட்டால்தான் பலனைத்தரும். இந்திரியவஸ்து எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகயிருக்கிறதோ அப்பேர்ப்பட்ட பூமிகளில் இவ்வெரு பலனைதாராது. ஆகையால் ஜாஸ்தி தழை அடிக்கப்பட்ட பூமியில் இந்த எருவை போடவேண்டும்.

மீன் பிண்ணாக்கு

இது நஞ்சைக்கு சர்வ சிலாக்கியமான எரு. இது தூளாகயிருக்கும் ஏகர் 1-க்கு 9 மணு தெளித்தால் போதும். 1 கூடை தூளோடு 4 கூடை ஈரமணலை கலந்து நடவுதினம் காலையில் ஒரு ஏகரா பூமியில் ஆறு மணுவையும் தெளித்து உழுது நட்டுவிடவேண்டும். இது போட்ட வருஷத்திலேயே பலன் தரும். 10 நாள் ஜலத்தை வடியவிடாமல் பார்த்துக்கொள்ளவும்.

பலவிருக்ஷங்களுக்கு ஷை எருக்கள் போடும் விதம்.

மா, பிலா தென்னை, நார்த்தை, எலுமிச்சை, முதலிய பலவிருக்ஷங்களுக்கு எப்படி போடுவதென்றால் மரத்துக்கு 1 கஜதூரம் விட்டு பிறகு சுற்றிலும் 1½ அடி அகலம் 1½ ஆழம் வெட்டிவிடவேண்டியது. நான்கு அணா பொரும்படியான எலும்புத்தூள் அல்லது மீன் பிண்ணாக்குத்தூள சுற்றிலும் குழியில் போட்டுவிடவேண்டியது. எலும்புத்தூள் 1½ மரக்கால் அல்லது மீன் பிண்ணாக்கு 10 பவுண்டு ஒரு மரத்துக்கு செல்லும். இத்தூள்களை மரத்தை சுற்றி குழிகளில் போட்டு தழைகளை போட்டு குழிகளை நிரப்பி அதின் பேரில் 1-படி சுண்ணாம்பு நிரப்பவும் இரண்டுபடி சாம்பலையும் தெளித்து மண்ணால் மூடிவிடவேண்டியது. இப்படி செய்வது மார்காலம் அர்ப்பசி கார்த்திகை மாதங்களில் செய்ய வேண்டும். கோடை காலத்தில் செய்தால் தண்ணீர் இறைக்கவேண்டும். நஞ்சைக்கு நடவுகாலம் ஆவணி, புரட்டாசி, ஆனதால் இப்போதே மெம்பர்கள் எருக்களை தங்களுக்கு வேண்டிய அளவு வாங்கிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

அ. சேதுராமய்யர்.

புண்ணாக்கு வகைகளை ஏற்றுமதிசெய்யாது தேசத்திலேயே நிறுத்திக்கொண்டு முன்னிலும் அதிகமாக உபயோகிக்கவேண்டும் என்பதற்கு நியாயம்.

குடியானவனுக்கும் மூலதனம் (கைம்முதல்) நிலம் பயிரிட்டு கந்தாயம் கூலிவகையராச்செலவுபோக மீதம் அவன் காலக்ஷேபத்திற்கு நிற்பதுதான் அதிலிருந்துவரும் வட்டி. அறிவுள்ள ஒரு குடியானவன் ஒரு வெள்ளாமை விளைவதற்கு அவசியமாயிருந்த பயிருணவும் பொருள்களை திரும்பவும் நிலத்திலேயே போட்டு தனக்குவரும் லாபத்தை விருத்திசெய்வதிலேயே கருத்தாயிருப்பான். ஆகமற்றவனோ ஒரு வெள்ளாமை எடுக்கும்போதே அப்பயிர் உட்கொண்ட பயிருணவையும் கொண்டுபோய்விடுவதால் செலவானதற்கு பர்த்திபண்ணாமல்போய் முதல் குறைந்துகொண்டுபோய் அதனால் ஆதாயமும் குறைந்துகொண்டேபோவதைக் கவனியாது ஏதோவருகிற ஆதாயத்தைக்கொண்டு திருப்தியடைகிறான்.

நிலம் சொந்தமாய் வைத்துக்கொண்டு பண்ணையும் பார்த்துவருகிறவனுக்கு பின் சொன்னபடி இருந்து வருவது அறியாமையால் ஏற்பட்டாலொழிய அவன்மேல் பெருந்தப்பாகும். குறிகிய காலத்திற்கு உயர்ந்த குத்தகைக்கு ஏற்றுக்கொண்டு பயிரிடும் குடியை யாரும் குறை கூற நியாயமேயில்லை. செடிகள் வளர இன்னின்ன வகை உணவுகள் வேண்டுமென்றும், பின் தானியம் பழம், முதலியது உண்டாய் முதிர்ந்து விளைய அவைகள் இன்னின்ன இடத்திலிருந்து வந்து சேருகின்றன என்பதையும் கண்டறிய அநேக சாஸ்திர நிபுணர்கள் தங்கள் வாழ்நாள் முழுமையும் கழித்திருக்கிறார்கள். ஒரு செடியைச் சுட்டால் நிற்கும் சாம்பலில் அடங்கியிருக்கும் மூலப்பொருள்கள் அவ்வளவும, நைட்ரோஜன் என்னும் வெடி உப்பு வாய்வும் பூமியிலிருந்துதான் செடிகளுக்கு வருகின்றன. இவைகள் நீங்கலாக வேறேசெடிக்குள்ளிருப்பது நீரும், எவைகளின் சேர்க்கையால் நீரும் ஆகாயமும் ஆயிருக்கின்றனவோ அம்மூலப்பொருள்கள் சேர்ந்தான சேர்கலைப் பொருள்கள்தான். ஆதலால் பின் சொன்னவைகளுக்காக செலவுசெய்து எருவிடவேண்டியதில்லை. இருந்தாலும் எல்லா எண்ணெய்வகைகள், பஞ்சு, சர்க்கரை, குங்கிலிய வகைகள், கோந்து தினுசுகள், ரப்பர், மாவு முதலிய மிகவும் விலைபெற்ற பொருள்கள் பல இதற்குள் அடங்கிவிடுகின்றன. தானியங்களிலும், கிழங்குகளிலும் இருக்கும் முக்கிய உணவுப்பொருள் மாவு. செடிகள் உண்டாய் வளர்ந்து இப்பொருள்களை எல்லாம் தரவேண்டுமானால் செடிகளுக்கு சாம்பலின் மூலப்பொருளும் வெடியுப்பு வாய்வும் இன்றியமையாதன. இந்தப்பொருள்களும் நீரில் கரைந்து கலந்துபோகும் நிலைமையில் இருக்கவேண்டும்.

விதையிருக்கும் ஒவ்வொரு செடியும், வேர் உண்டாய் அதன் மூலமாய் உணவுப்பொருள்களை பூமியிலிருந்து தாமே கிரஹித்துக்கொள்ளும் சக்தி வரும் வரையிலும், விதை முளைத்து ஒரு இளஞ்செடி உண்டாவதற்கு போதுமான சாம்பலின் மூலப்பொருள்களையும் நைட்ரோஜன் என்னும் வெடியுப்பு வாய்வையும் உடனே உபயோகப்படுத்திக்கொள்ளக் கூடிய நிலைமையில் விதையில் சேகரித்து வைத்திருக்கின்றன.

ஆதலால் குடியானவன் தான்யத்தையும் வித்து வகைகளையும விற்கும்போதே மூலதனமாகிய, ஊபயோகத்திற்கு லாயக்கிலிருக்கும் பயிருணவில் கொஞ்சத்தை விற்றுவிடுகிறான். நிலத்திலிருக்கும் அப்படிப்பட்ட பயிருணவிற்கும் ஒருவரையறை யிருப்பதால் செலவழிந்த பொருளுக்கு பர்த்தியாக ஒரு வாயிலாக பர்த்திபண்ணவேண்டும். இதுபோல ஒரு தேசத்தை மொத்தமாய் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது எந்த தானியங்களையும் வித்துவகைகளையும் வெளிதேசத்திற்கு விற்கும்போதே தேசத்தின் வளமாகிய மூலதனத்தின் ஒரு பகுதியை அத்தேசம் இழந்துவிடுகிறது. ஆனால் ஒரு குடியானவன் (பருத்தியை அரைத்து) பஞ்சைமட்டும் விற்பதாகவும், தைலவித்துக்களை ஆடி எண்ணெயை விற்றுவிட்டு மீதமிருக்கும் பருத்திக்கொட்டை புண்ணாக்கு முதலியவைகள் எல்லாவற்றையும் அப்படியே ஆவது மாட்டிற்குப்போட்டு அதன் எருவாகவாவது திரும்பவும் அந்த நிலத்திற்கு உரமாகப் போடுவதாக வைத்துக்கொண்டால், உடனே உபயோகப்படக்கூடிய பயிருணவைச்

சேர்க்கிறதால் மூலதனத்தைச் செலவழிக்காமல் அதற்கே பின்னும் கொஞ்சம் பொருளைச் சேர்த்து விருத்திசெய்வதுபோலாகிறது. இது போலவே பருத்திப் பஞ்சையும் எண்ணைகளையும் மட்டும், ஒரு தேசத்திலிருந்து விற்றுவருவதாயிருந்தால், அந்த நஷ்டத்தை ஈடுசெய்ய எருவிட வேண்டிய செலவே யில்லாதிருப்பதால் அத்தேசத்தின் செல்வம் விருத்தியாய்க்கொண்டிருக்கும். எந்த வெள்ளாமை எடுக்கிறோமோ அதையே திரும்ப நிலத்தில் போடுகிறது வழக்கத்திலில்லை. நிலக்கடலை (வேர்க்கடலை) பயிரிடுவதானால் அதில் வந்த புண்ணாக்கவ்வளவையும் அது விளைந்த நிலத்திற்கே போடுவதில் லாபமில்லை. அவைகள் சாதாரணமாய் மணற்பாங்கான செவ்வல் நிலங்கள். அது சில வருஷங்களில் விளையாமலே போய்விடும். புண்ணாக்கை விற்றுவரும் பணத்தைக் கொண்டு மாட்டெருவும் ஊர்க்குப்பையும் வாங்கலாம். அல்லது நஞ்சைக்கும் தோட்டங்களுக்கும் புண்ணாக்கைப்போட்டுவிட்டு தொழு எரு, குப்பை முதலியவைகளை அடுத்துவரும் நிலக்கடலைப் பயிருக்கு உரமாக உபயோகிக்கலாம்.

நல்ல வேளையாய் நம் இராஜதானியில் நாட்டில் விளையும் தானியம் பூராவிற்கும் நாட்டிலேயே செலவிருக்கிறது. ஆகையால் இத்தானியங்களிலடங்கியிருக்கும் பயிருணவு பூராவும் முடிவில் நிலத்திற்கே திரும்பிவிடுகிறது. ஆனால் தைலவித்துக்கள் சம்மந்தப்பட்ட மட்டில் அவைகள் அநேகமாய் நாட்டிலிருந்து வெளிதேசங்களுக்கு ஏற்றுமதியாய் விடுகிறபடியால் அதிலடங்கியிருந்த பயிருணவவ்வளவும் நாட்டிற்கு நஷ்டமே. எண்ணை மட்டுமென்றால் பரவாயில்லை. ஏனெனில் மேலே சொல்லியபடி தண்ணீர் காற்று இவைகளில் அடங்கியிருக்கும் தாதுப் பொருள்களால்தான் எண்ணை ஆகிறது.

தனி எண்ணைக்குமட்டும் ஏற்றுமதி கிராக்கியில்லாமல் தைலவித்துக்கே ஏன் கிராக்கி இருக்கிறது? சென்னை இராஜதானியிலிருக்கும் குடியானவர்களைக் காட்டிலும் மற்ற நாட்டுக் குடியானவர்களுக்கு புண்ணாக்கின் அருமை விசேஷமாய்த் தெரிந்திருக்கிறது. சில புண்ணாக்குகளை நேராய் அப்படியே உரமாய் வைத்துவிடுகிறார்கள். மற்றவைகளை ஆடு மாடுகளுக்கு உணவாகப்போட்டு அதன் மூலமாய் அதன் எருவை சிலாக்கியமாக்கி நிலத்திற்கு எரு விடுகிறார்கள். புண்ணாக்குக்கு அதிக விலை கொடுத்து வாங்குவதோடு அதன் ஏற்றுமதி செலவாகிய கப்பற்கேழ்வு முதலிய செலவுகளையும் அதன் வியாபாரிகளுடையும் லாபத்தை அவர்கள் கொடுக்க இசைகிறார்கள்.

சென்னை ராஜதானியிலும் புண்ணாக்கு சிறந்த உரம் என்பதும் கால்நடைகளுக்கு நல்ல தீனி என்பதும் அநேக சமுசாரிகளுக்குத் தெரியும். இந்த விஷயங்களை ஏற்கனவே தெரியாதிருக்கும் குடியானவர்களும் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற நோக்கத்துடன் இக்குறிப்பு பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. நன்றாய் பாதுகாக்கப்பட்டுவரும் எருதுகளின் எரு ஐந்துவண்டி பாரத்திலடங்கியிருக்கும் பயிருணவு ஒரு பாரம் (500 ராத்தல்-20 மணங்கு) முத்துக்கொட்டை அல்லது மணிலாக்கொட்டை (வேர்க்கடலை) புண்ணாக்கில் அடங்கியிருக்கிறதென்பதை யறியத்தக்கது.

தென்னார்க்காடுஜில்லாவில் புண்ணாக்குகளை, கரும்பிற்கும் நெல்லிற்கும் விசேஷமாய் எரு வைக்கிறார்கள். இந்தஜில்லாவின் செவ்வல்நிலங்களாயுள்ள புஞ்சை பூமிகளில்விளையும்வேர்க்கடலை பூராவும் விற்றுவிடுகிறார்கள். இந்தநிலங்களின்விளைவுகுறைவுபடாதவண்ணம் தொழு எரு எவ்வளவு அகப்படுகிறதோ அவ்வளவையும் கொண்டுபோய் போடுகிறார்கள். இதனால் நஞ்சைகளுக்கு மாட்டெரு என்பதே கிடையாது. நஞ்சை நிலங்களின் வளம் குறையாதபடி வேர்க்கடலைப் புண்ணாக்கை காணிக்கு ஒரு பாரமாக உரம் போடுகிறார்கள். இது ஒரு நல்லவழக்கம். செவ்வல் நிலங்கள்பூராவும் வானம் பார்த்தவைகள். மாட்டெருபோடும்போது ஒரு வருஷம் மாகுல் விளையாது போனாலும் மோசமில்லை. இவ்வெருவின் சத்து ஒருபோகத்தோடு ஒழிந்து போகாது. அநேகமாக அடுத்த போகத்திற்குமிருக்கும். வேர்க்கடலைப் புண்ணாக்கு கரைந்துபோகக் கூடியதும் விலைபெற்றதாகவுமிருப்பதால் கட்டாயம் அதே போகத்தில் நன்றாய் விளையும் என்னும் நம்பிக்கையிருப்பதால் நஞ்சை நிலங்களுக்கு உபயோகிக்கிறார்கள். உரமெல்லாம் நெற்பயிரே உட்கொள்ளுமென்றும் எருவிற்குப் போட்ட பணம் குறித்த காலத்திற்குள்ளே திரும்ப ஆதாயத்தோடு வந்துவிடுமென்றும் உறுதி குடியானவனுக்குண்டு.

கோதாவரி தென்னார்க்காடு ஜில்லாக்களில் கரும்பிற்கெல்லாம் முத்துக்கொட்டைப் புண்ணாக்கை ஏக்கருக்கு 4 அல்லது 5 பாரம் வைக்கிறார்கள் இதை சாதாரணமாய் நட்டபின் மேல் எருவாக கொஞ்சத்தை முதல் முதல் மண்ணணைக்கும்போதும், மீதத்தை கடைசியாய் மண்ணணைக்கும்போதும் வைக்கிறார்கள். விவசாய டிபார்ட்மெண்டில் சோதனைகள் செய்துபார்த்ததில் மாட்டெருவை ஏராளமாய் போட்ட பயிரைக்காட்டிலும் புண்ணாக்கு வைத்த பயிரே அதிக மாகுல் கொடுக்கிறதென்பது தெரிகிறது. கரும்பு எல்லாம் ஒன்றுபோல் ஏககாலத்தில் முதிர்ந்து ஆகிற வெல்லமும் நல்லமாதிரியாயிருப்பதோடுகண்டு முதலும் அதிகமாய்க் காண்கிறது.

கோயம்புத்தூரிலிருக்கும் ஸெண்ட்ரல் பாரத்தில் (பெரிய பண்ணையில்) தோட்டப்பயிர் (இறைவைப் பயிர்) எல்லாவற்றிற்கும் புண்ணாக்குரம் வைப்பதில்லாபம் என்று கண்டறியப்பட்டிருக்கிறது. ஈரோட்டுக் கருகிலுள்ள காவிரி யடுத்த 'ப்ரதேசங்களிலுள்ள குடிகள் சென்ற சில வருஷங்களுக்குள்ளே புண்ணாக்கின் குணத்தையறிந்துகொண்டு மஞ்சள் வாழை, கரும்புமுதலியவை பயிர்களுக்கெல்லாம் விசேஷமாய்ப் புண்ணாக்குரம்போட்டுவருகிறார்கள்.

மேற்கண்டசில உதாரணங்களிலே சென்னை ராஜதானியிலுள்ள குடியானவர்கள் பலருக்கு புண்ணாக்கெருவின் குணம் தெரிந்திருக்கிறதென்று தெரிகிறதாலும், புண்ணாக்கு தற்காலம் மிகவும் சவதமாயிருப்பதாலும் இன்னும் பலரும் புண்ணாக்கைவாங்கி எருவாகப்போட்டு சோதனைப்பார்த்து மேற்சொன்னவைகளின் உண்மைகளை தாங்களே நேரில் கண்டறிந்துகொள்ளுவார்களென்று எண்ணுகிறோம். தவிர சௌகரியப்பட்டால், புண்ணாக்குவாங்கிபோடுகிற செலவிற்கும் அதனால் விளையும்அதிகமாகுலிற்கும் உள்ள லாபநஷ்டத்தைக் கணக்குப்போட்டும் பார்த்துக்கொள்ளலாம். பின்னிட்டும் புண்ணாக்கு எந்தமட்டும் விலை கொடுத்து வாங்கிப்போட்டால் சட்டுபடியாகுமென்றும் கண்டறிந்து கொள்ளலாம்.

புண்ணாக்கு வாங்கிப்போட்டால் கட்டும் என்கிற விஷயமட்டுமல்ல, அநேகம் சமுசாரிகள் மாட்டெரு சல்லிசு என்று சொல்லுகிறார்கள். அதை இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால் மாட்டெரு இருப்பதே கொஞ்சம். அநேகருக்குத் தங்கள் சொந்த நிலத்திற்கே எல்லாவற்றிற்கும் போடப்பற்றாது.

பற்றாதபடி எரு விடுவதைப்போல் விவசாய அபிவிர்த்திக்குக் கேடு வேறொன்றில்லை. எருவிற்குப் போடும் பணத்திற்கு போதுமான ஆதாயம் விளைவில் கண்டுகொண்டிருக்கும் பரியந்தம் எல்லாவகையிலும் கிடைக்கக்கூடியவைகளை வாங்கிப்போடாதிருக்க நியாயமில்லை, இறவைப் பயிர்களுக்கும் நஞ்சைக்கும் கட்டாயம் இந்தப்படி பார்க்கவேண்டும். இவைகளுக்காகும் (முட்டுவழி) செலவிலே நீர்க்கூலியும், இறவைப் பயிர்களுக்கு இறைப்பிற்குப்பிடிக்கும் செலவும் ஜாஸ்தியாயிருக்கும். ஆகையால் குறைவான மாசூல் கண்டால் கட்டுப்படியாகாது. அநேகமாய் நஷ்டமேவரும். எருவிற்குப்போடும் பணம் வட்டிக்குப்போட்ட பணம் போலே. எருவை வைப்பதற்கு அதிகம் சிலவாய்விடாது. அதினால் முட்டுவழி (தசைகூலி) உயர்ந்துபோகாது. மாசூல் அதிகம்காண்கிறதால் அறுவடையில் செலவு கொஞ்சம் ஏறலாம். பயிர் நன்றாயிருந்தாலும் சரி கெட்டிருந்தாலும் சரி உழவு, விதைப்பு, களையெடுப்பு, இறைப்பு எல்லாம் ஒன்றுபோல்தானிருக்கும்.

இதுமட்டுமல்ல. சிலபயிர்களுக்கு ஏராளமாய் உரம்வைக்கவேண்டும் மாட்டெரு தவிரவேறொன்றுமில்லையென்றால் ஒருவனிடத்திலிருக்கிற எருவெல்லாம் சேர்த்தாலும் மற்ற பாகங்களுக்கெல்லாம் போடாமல் ஏதோ ஒரு சுருக்கமான பாகத்திற்கு மட்டும் காணும். சரிதான், மாட்டெரு எல்லாம்சேர்த்து ஒருகரும்புப்பயிருக்கு எருவிட்டு 200, 300 ரூபா லாபமடைவதாய் வைத்துக்கொள்ளுவோம். இந்தப்படி கரும்பில் லாபம் வர மற்றப்பயிருக்கெல்லாம் எருவிடாமல் பட்டினிபோட்டதால் மாசூல் குறைந்துபோனதால் வருகிற நஷ்டத்திற்கு என்ன செய்கிறது. ஒரு 75 ரூபாபோல செலவழித்து முத்துக்கொட்டை புண்ணாக்கு வாங்கிப் போட்டுவிட்டு இருக்கிற தொழு எருவை மற்ற பயிர்களுக்குப் போட்டிருந்தால் நல்ல லாபமாயிருக்கும்.

புண்ணாக்குகளை உரமாய்ப் போடுமுன் செவ்வையாய் தூள்செய்து போடவேண்டும். இதுகாரமுள்ளதானதால் எங்கும் ஒன்றுபோல் சிதற வேண்டும். புண்ணாக்கைத்தண்ணீர்விட்டுஊரவைத்து மிச்சத்தண்ணீரை வடித்து விட்டு சாம்பலைக் கொஞ்சம் சேர்த்து நன்றாய்உதிரும் பக்குவம் வரும்வரை கலந்து கொடுத்து பின் எடுத்து உபயோகப்படுத்தினால் எங்கும்ஒன்றுப்போல்சிதறுவது சுலபமாயிருக்கும், சாம்பல்சேருவதினால் எருச்சத்தம், அதிகப்படும்.

சர்க்கார் பண்ணையநேகத்தில் பருத்தி விதையோடு வேர்க்கடலைப் புண்ணாக்கை கலந்து கால் நடைகளுக்கெல்லாம் கொடுத்துவருவதிலதில் சிலாக்கியமாயிருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில் ஜனங்கள்நாளுக்கு நாள் அதிகமாகவே இதை மாடுகளுக்குத் தீனியாய் உபயோகித்து வருகிறார்கள். இது மடித்துக் காரிப்போகாமலிருக்கிற சரக்காகப் பார்த்து வாங்கவேண்டும். மடிசல் சரக்கை ஆடு மாடுகள் சரியாய்த் தின்னாது.

நோய் அல்லது வேறொரு வழியாய் புண்ணாக்கு [illegible]மாய் உபயோகப்படுத்தும் விதம் ஒன்றுமிருக்கிறது. வேலைசெய்யும் கால்நடைகளுக்கு உணவாக உபயோகப்படுத்தி, அதன் மூலமாய் எரு சத்துள்ளதாகும்படி செய்து வருவதுதான். விலைபெற்ற மாடுகளுக்குப் பருத்திக் கொட்டையும் கொள்ளும் (காணமும்) கலந்து கொடுக்கிறார்கள். இதில் கொஞ்சத்திற்குப் பதிலாக மணிலாக்கொட்டைப் புண்ணாக்கைச் சேர்த்துக்கொண்டால் செலவு குறைவாகும். பருத்திக் கொட்டையைப் பூராவும் தள்ளி அதற்குப் பதிலாக புண்ணாக்கைச் சேர்த்துக்கொள்வது சரியல்ல. ஏனெனில் புண்ணாக்கு ரொம்ப சத்துள்ளதானதால் அதிகம் சேர்த்தால் உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாது. பாதி புண்ணாக்கும் பாதி பருத்தி விதையுமாகச் சேர்த்துக்கொடுத்தால் ஒத்துககொள்ளும்,

H. C சாம்ஸன்,
விவசாய டிப்டி டைரெக்டர், 5, 7 சர்க்கில்ஸ்,
திருச்சிராப்பள்ளி.

நெல் சொற்ப நாற்று நடுகை.

இந்த பஞ்சாங்கத்தை வாசிப்போர் இந்த விஷயத்தைக் குறித்த குறிப்புகளை அதிகமாய் கண்டு அலுத்திருக்கலாம். ஆனால் இதை எழுதுபவர் தேசங்களின் பல விடங்களில் பிரயாணஞ்செய்ததிலும் நெற் பயிர்களை பார்த்ததிலும் இந்த முறை அநேகயிடங்களில் அனுஷ்டிக்கபடாததையும் சில விடங்களில் அதைக்குறித்து குடியானவர்கள் கேள்விப்படாததையும் கண்டிருக்கிறார். இது அதிசயம். ஏனென்றால் ஒவ்வொரு கிராம முன்சீப்புக்கும் ஒவ்வொரு பள்ளிக்கூடத்து உபாத்தியாயருக்கும் அவரவர்கள் பாஷைகளில் எழுதிய பஞ்சாங்கம் ஒன்று அனுப்பப்படுகிறது. ஒரு சமயம் கிராமமுன்சீப்பு அல்லது பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் இந்த குறிப்புகளை படிக்கிறதில்லை போலும் அல்லது தாங்கள் படித்ததை இதராளுக்கு சொல்லுவதில்லை போலும்; இது சரியல்ல. ஏனென்றால் ஒரு கிராமத்தின் செல்வம் கிராமத்திலுள்ளவர்களின் செல்வத்தை பொருத்திருக்கிறது. ஏதாவது ஒரு முறையால் சாகுபடியின் சிலவை குறைக்க முடியுமானால் அல்லது ஒரு பயிரின் மாசூலை அதிகரிக்க முடியுமானால் அந்த விஷயங்களை எல்லாருக்கும் பொதுவான சொத்தாக செய்யவேண்டும். ஆகையால் இந்த விஷயத்தைக்குறித்து பஞ்சாங்கம் வாசிப்போருடைய கவனத்திற்கு மறுபடி கொண்டுவருவதற்கு இது தான் என்னுடைய நியாயம்.

இந்த டிபார்ட்மெண்டார் 10 வருஷகாலமாய் ஒவ்வொரு நஞ்சை கிருஷிகனும் சு[illegible]பமாய் செய்யக்கூடிய இந்த சொல்பமான அபிவிர்த்தியை செய்யும்படி சொல்லி வந்திருக்கிறார்கள். இதை செய்ய முயன்றால் நஞ்சை கிருஷிகனுக்கு அதிக லாபமுண்டு. இந்த முறையை சுருக்கமாய் விவரித்தபின் குடியானவர்கள் ஆக்ஷேபணைகளை குறித்து பேசுவேன்.

நாற்றங்காலை வெகு நன்றாய் உழுதும் சரியாய் எருவிட்டும் பரம் படிக்கவும்வேணும். புழுதி நாற்றங்கால்முறை அனுஷ்டிக்கப்பட்டால் சாணிஎருவாகிலும் அல்லது கிராம குப்பையாகிலும் அல்லது ஆட்டுப் பட்டியாகிலும் மாட்டுப்பட்டியாகிலும் போட்டு நன்றாய் எரு விடல் வேண்டும். சேற்று நாற்றங்கால் செய்யும் பட்சத்தில் பூமியை நன்றாய் சேடை உழவு செய்தும் எருவுக்காக பசுந்தழைகளை மிதித்து பின் னிட்டு ஜாக்கிறதையாய் பரம்படிக்கவேணும்.

நாற்று நடவேண்டிய ஒரு எகருக்கு 7 பட்டணம்படி நெல்விதைக்கு அதிகப்படாமல் 7 செண்டு நிலத்தில் விதைக்கவேண்டும். சில தினுசுகளை இந்த விஸ்திரணமுள்ள நாற்றங்காலை இரண்டு எகர் பூமியில் நடலாம். உயரமாயும் நன்றாய் தூர்கட்டுகிற தினுசுகளை இன்னும் அதிக பூமியில் நடலாம். ஆனால் எல்லாதினுசுகளும் எகருக்கு 7 பட்டணம்படி விதை போதுமானது. நாற்றுகளை சரியான காலத்தில் நடவேண்டும். நாலுமாத தினுசை நாலுவாரம் வயதில் நடவேண்டும்; 5 மாத தினுசை 5 வாரத்தில் நடவேண்டும். 6 மாத தினுசை 6 வாரத்தில் நடவேண்டும். நாற்றுகளை பிடுங்குமுன் நாற்றங்காலை நன்றாய் நனைக்க வேண்டும். இவைகள் பெரியதாயும் நன்றாய் வளர்ந்தவைகளாயிருக்கின்றன. நாற்றங்காலை நனைக்காவிட்டால் நாற்றுகள் பூமியில் நன்றாய் ஊன்றி வளர்ந்தவைகளானதால் அவைகள் அறுந்து விடக்கூடியதாயிருக்கின்றன.

நாற்றுகளை நடவேண்டிய தூரம் சாதாரண முறையில் நடுகிற தூரந்தான் இருக்கவேண்டும். மேன்மையான பூமியில் இவைகள் ஒற்றையாய் தூரந்தூரமாய் நடப்படுகின்றன. கேவலமான பூமிகளில் ஒற்றையாய் இவைகள் நெருக்கமாய் நடப்படுகின்றன. நட்டபின் செய்யும் வேலைகள் சாதாரண முறையில் நடப்பட்ட பயிர்களுக்கு எப்படியோ அப்படியேதான் சுருக்கமாய் இம்முறையில் நல்ல உறுதியுள்ள பட்டை சேர்ந்த நாற்றுகளை உற்பத்திசெய்து நடும்போது அவைகள் சரியாய்வளர வேண்டியதற்கு போதுமான இடம் கொடுக்கவேண்டியது.

இதில் விசேஷ குணங்கள் (1) விதை மிச்சம் 2) ஒற்றை நாற்றாய் நடும்போது நாற்று சீக்கிறம் வேர் பிடித்து வளருகிறது.

தன்னுடைய வேர்களை செலுத்த பிடிபிடியாய் நட்ட முறையில் இதர நாற்றுகளுடன் இடத்திற்காக சச்சரவு படுவதில்லாமல் வேர்களை எல்லா பக்கங்களிலும் செலுத்துகிறது.

(5) இதர 10, 20, 50 பயிர்களுடன் உணவு பொருள்களை பங்கிடுவதற்கு பதிலாக நாற்றுகள் தனியேயிருப்பதால் பூமியிலுள்ள எல்லா உணவு பொருள்களை உபயோகப்படுத்த சாத்தியமாகிறது. நான் ஒரு பிடியில் 56 நாற்றுகள் எண்ணியிருக்கிறேன். பிடிக்கு 30 நாற்றுகளுக்கு அதிகமாய் நடப்பட்ட பூமிகளை அடிக்கடி பார்ப்பது சாதாரணம்.

(4) ஒற்றையாய் நடப்பட்ட நாற்றுகள் வேருகளை செலுத்தி பிடிபிடியாய் நடும் நாற்றுகளைவிட அதிக சீக்கிறம் ஸ்தாபிக்கப்படுவதினாலும் நாற்றங்காலில் செழிமையாய் வளர்வதினாலும் அதிக ஜலத்தை பெறுக்கவும் ஜலக்குறைவை தாங்கவும் சக்தி உண்டாகிறது.

(5) ஏககாலத்தில் எல்லா பயிர்களும் ஸ்தாபிக்கப்படுவதினால் ஒரே காலத்தில் சமமாய் விளைகிறதுமல்லாமல் தானியத்தில் ஊண் நன்றாய் பிடிக்கிறது.

இந்த முறை அனுசரிப்பதில் அடியில்கண்ட ஆக்ஷேபனைகள் அடிக்கடி செய்யப்படுகிறது.

1. பூமி சரியானபடி எருவிட்டாலொழிய, பூமியின் செழுமை குறைகிறது. இதை யார் சொல்லுகிறாரோ அவன் குடியானவனல்ல ஒவ்வொரு குடியானவனும் சரியான எருவை போதுமான அளவு உபயோகப்படுத்தினால் எருவுக்கு சிலவழித்த பணத்தின் மேல் குறைந்த பட்சம் 100க்கு 100 பலன் கிடைக்குமென்று தெரியும்.

2. பாய்ச்சப்படும் ஜலம் எப்போது கிடைக்குமென்று நிச்சயமில்லாததால் நாற்றங்கால் நெருக்க தெளிக்கப்பட்டால், நாற்றுகள் நாற்றங்காலில் அதிககாலம் நிற்கவைக்க முடியும். இது உண்மைதான் ஆனால் இது ஒரு சோம்பேரியின் ஆக்ஷேபனை. ஒரு நெருக்க தெளித்த நாற்றங்காலுக்கு 4 முதல் 7 மடங்கு அதிக விதை தேவை. அதாவது விதைக்கு விலை 4 முதல் 7 மடங்கு அதிகமாகிறது. கொஞ்சம் சிரமமும் மேற்பார்வையும் இருந்தாலும் இரண்டு நாற்றங்கால் ஒன்றை மற்றதை விட 2, 3, வாரத்துக்குமுன் விதைத்து உற்பத்தி செய்வதினால் சிலவு குறையும். சீக்கிறம் ஜலம் கிடைத்தால் முதலில் விட்ட நாற்றுகளை உபயோகப்படுத்தலாம். பின் கிடைத்தால், இரண்டாவது விட்ட நாற்றங்காலை உபயோகப்படுத்தலாம். முதலில்விட்ட நாற்றங்காலை உபயோகப்படுத்தினால் இரண்டாவது விட்ட நாற்றங்காலை தன்னுடைய சொந்த நாற்றுகளில்லாதபின் நடவு செய்யும் ஜாக்கிறதை குறைவுள்ள வேறு குடியானவனுக்கு விற்க சாதாரணமாய் சாத்திய மாகும். நாற்றுகள் உறுதியாயுமிருக்கும் பட்டைசேர்ந்ததாயும் இருக்கும் சிலாக்கியம். இதற்குண்டாகிறது. ஆனால் நெறுக்க விதைத்த நாற்றங்காலோ வெளுத்தும் வளர்ச்சிகுறைவாயுமிருக்கிறது.

3. நாற்றுகளை ஒற்றையாய் நட ஸ்திரீகள் கஷ்டப்படுகிறார்கள். அப்படியானால் நாற்றங்காலில் பிசகு இருக்கிறது. சரியான எரு விடவில்லை அல்லது நாற்றங்கால் முழுவதும் விதை சரியானபடி தெளிக்கப்படவில்லை. நன்றாய் வளர்ந்த உறுதியான நாற்றுகளை பிரிப்பதில் யாதொரு கஷ்டமில்லை. 4 வெட்டுகிளி அல்லது இதர பூச்சிகளால் நாற்ங்கால்கள் நாசமடையப்பட்டு நடுவதற்கு போதுமான நாற்றுகள் கிடைப்பதில்லை. இது வாஸ்தவம். ஆனால் இந்த பயமிருந்தால் 30-40 பட்டணம் படி, 7 செண்டு பூமியில் விதைப்பதைவிட இந்த பயத்தை உத்தேசித்து 10 பட்டணம் படி விதை 10 செண்டில் விதைப்பது இன்னும் லாபகாம். தவிர இப்போர்க்கொற்ற பூச்சிகளின் தொந்தரவு உண்டாகுமென்ற பயமிருந்தால் விசாலமாய் விடப்பட்ட நாற்றங்காலிலுள்ள செழிமையான நாற்றுகளைக்காட்டிலும் நெருக்க தெளிக்கப்பட்ட நாற்றங்காலிலுள்ள வளர்ச்சி குன்றிய நாற்றுகள் அதிக நஷ்டத்தை படைய ஏது உண்டாகும் இதை படிப்பவர் நல்ல நாற்றங்கால் உற்பத்தி செய்ய இன்னும் பயந்தால் தன்னுடைய நெருகக தெளிக்கப்பட்ட நாற்றங்கால் ஓரங்களிலிருந்து உறுதியான நாற்றுகளை பிடுங்கி ஒரு சிறிய

பூமியில் நட்டுப்பார்க்கலாம். இதை செய்தால் இப்போது சொல்லப்படும் புத்திசரியானதென்று அவன் திருப்தியடைவானென்று நினைக்கிறேன்.

H. C. சாம்சன்,
விவசாய டிப்டி டைரெக்டர்,
5, 7 வது சர்க்கில்கள், திருச்சினாப்பள்ளி

சர்க்கார் பருத்தி.

இது நயமான கரிசல் நிலங்களில் சற்று மழை மட்டமாயிருந்தால் புஞ்சைப் பயிராய் நன்றாய்ப் பயிராகக்கூடிய ஒரு கினுசு நாட்டுப்பருத்தி. இதைச் சற்று வளர்ந்து பெரிய தழை விட்டுக்கொண்டு இலைகள் அடர்ந்த செடியான அந்நியதேசத்து கம்போடியா என்று எண்ணிவிடக்கூடாது. கம்போடியாவோ நீர்பாய்ச்சக்கூடிய செவ்வையாய் உரமிட்டிருக்கும் தோட்டக்கால் நிலங்களில்தான் நன்றாய் உண்டாய்த் தகுந்த மாசூலைத் தரும்.

இந்த சர்க்கார் பருத்தியில் இரண்டு கினுசுகள் இருக்கின்றன அதில் ஒன்று ஹகரி என்னுமிடத்திலிருக்கும் சர்க்கார் பண்ணையில் முதலில் உற்பத்தியானது. அது பல்லாரியிலும் வருஷத்தில் 20 அங்குலம் மழைபெய்யும் கர்நூல் ஜில்லாவில் எர்ரமலைக்கு மேற்கேயுள்ள பிரதேசத்திலும்உள்ள கரிசல் நிலங்களுக்கும் உதவும். மற்றொன்று நந்தியால் சர்க்கார்பண்ணையில் உண்டானது. அது வருஷம் 30 அங்குலம் மழைபெய்யும் எர்ரமலைக்கும் நல்லமலைக்கும் இடையிலுள்ள கர்நூல் ஜில்லா கரிசல் நிலங்களுக்கு உதவும்.

இவ்விரண்டுபருத்திகினுசுகளும் ஒரேவிதமாய்தான் உண்டானது. அதெப்படியென்றால் ஹகரியில் உள்ளூர்ப் பருத்தியைக்கொண்டுவந்து மற்றெதுடனும் கலக்காமல் அலாதியாய் ஒரு புஞ்சையில் விதைத்துப் பயிர்செய்தார்கள். அந்தப் பயிரில் நல்ல செடிகளாய்ப் பார்த்து அவைகளின் பருத்தியை தனித்தனியாய்க் கூடியவரையில் ஒன்றோடொன்று கலந்துபோகாமல் பத்திரமாய் வைத்திருந்து அந்த விதைகளை தனித்தனியாய் சிறு சிறு துண்டு நிலங்களில் வைத்துப் பயிரிட்டார்கள். அதிலிருந்து கிடைத்த விதைகளை எடுத்து அதிக விஸ்தீரணமுள்ள நிலங்களில் பயிரிட்டு அவைகளின் மாசூலையெடுத்து ஒன்றுக்கொன்றுள்ள தாரதம்மியத்தைச் சரியாய் ஒத்துப்பார்த்து நயமானதென்று கண்டதை வைத்துக்கொண்டு மட்டமானதை தள்ளிவிட்டார்கள். இந்த நயமானவைகளை அந்தவருஷத்திலிருந்த நல்ல மழை முதலிய சாதகத்தினால் ஏற்பட்ட நல்லகுணமா அல்லது அது நிலைத்திருக்குமா என்று திட்டமாயறிய மறுபடி சில வருஷம் தனித்தனியாய் விதைத்து அதற்குள்ள வித்தியாசத்தையும், அவைகளுக்கும் ஊரில் விளையும் பருத்திக்கும் உள்ள தாரதம்மியத்தையும் பார்த்தார்கள்.

(இன்னும் வரும்.)

Printed at the Alexandra Press, Kumbakonam and Published by Mr. Rao Sahib C. R. Lakshmivaraha Ayyangar, B.A., B.L., & Mr. R. Srinivasa Ayyangar, B. A., for The Agricultural Association, No. 5, Cutchery Road, Kumbakonam.